350 கோடி ரூபாய்தான் செலவாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய அனுமதியைப் பெற்று நீங்கள் ஒவ்வொரு ஊராட்சிக்கும் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு திருமண மண்டபம் கட்டிக் கொடுப்பீர்களேயானால், எப்படி நீங்கள் இலவசமாக குடிசைகளை மாற்றி கான்க்ரிட் வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றீர்களோ, அதே புகழ் உங்களுக்கு வந்துசேரும். அதை நீங்கள் செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்கு விடையிருக்கிறது. ஏற்கெனவே சமுதாயக் கூடம் இல்லாத ஒவ்வொரு ஊராட்சியிலும் சமுதாய நலக் கூடங்கள் கட்டப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, எங்கெங்கு அது தேவைப்படுகிறதோ, அந்த இடங்களில் நிச்சயமாகக் கட்டித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

20—

தொழிற்பேட்டை

***71431—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 6]

(அ) காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இப்பொழுது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே காஞ்சிபுரத்தில்தான் அதிக அளவில் சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதிக அளவில் ஏழையெளிய பெண்கள் வருமானம்பெற, காஞ்சிபுரத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் சோப்பு தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல், மெழுகு தயாரித்தல், பொம்மை தயாரித்தல், அப்பளம் தயாரித்தல், சமையல் பொருட்கள் தயாரித்தல், சணல் பொருட்கள் தயாரித்தல், பாக்கு மட்டை தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். அந்தப் பொருட்களை ஒரே இடத்தில் உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் தொழிற்பேட்டை ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தின் சுற்றுவட்டாரத்தில், கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் பல தொழில்கள் நடைபெற்று வருகின்றன. காஞ்சிபுரத்திலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருக்கழுக்குன்றத்தில் ஆண்டிற்கு 120 இலட்சம் உற்பத்தித் திறன் கொண்ட சோப்பு அலகும், காஞ்சிபுரத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாமண்டூரில் ஆண்டிற்கு 100 இலட்சம் உற்பத்தித் திறன் கொண்ட சோப்பு அலகும் இயங்கி வருகின்றன. மேலும், காஞ்சிபுரத்தில் பட்டுக் கிளை ஆண்டிற்கு 30 இலட்சம் உற்பத்தித் திறனுடன் இயங்கி வருகிறது. காஞ்சிபுரத்திலுள்ள காதி-கிராப்டில் ஆண்டிற்கு 15.17 இலட்சம் விற்பனையும், காஞ்சிபுரத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செங்கல்பட்டிலுள்ள காதி-கிராப்டில் ஆண்டிற்கு 26.1 இலட்சம் விற்பனையும் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. எனவே, தனியாகத் தொழிற்பேட்டை அமைக்கும் அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய காஞ்சிபுரம் தொகுதிக்குதான் கேட்டேன். ஆனால், இவர் அந்த மாவட்டம் முழுவதுமுள்ள வேலைவாய்ப்பைப் பற்றிச் சொல்கிறார். காஞ்சிபுரத்தில் ஒரு தொழிற்சாலை வேண்டுமென்று பலமுறை நான் கோரிக்கை வைத்தேன். அண்ணா பிறந்த காஞ்சிபுரம் தொகுதிக்கு பல நலத் திட்டங்களை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், விவசாய வேலையின்றி இருக்கும் கூலிப் பெண்களின் வாழ்வாதாரம் உயர, இந்தப் பெண்ணின் அதாவது சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினரின் விருப்பத்திற்கேற்றவாறு, துறை அதிகாரிகளுடன் காஞ்சிபுரத்தில் ஆய்வு செய்து அத்தகைய தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளனவா என்பதை அறிந்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துகளை இந்த அவையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)